**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்**

**21.06.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை**

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல் அஹ்ஸாபின் 71, 72 ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا ﴿٧١﴾

يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَمَن يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ

فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا ﴿٧٢﴾

*பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். சரியானதும் உண்மையானதுமான வார்த்தையைக் கூறுங்கள். (நீங்கள் அவ்வாறு செய்தால்) உங்களுக்கு உங்கள் நடத்தைகளை அவன் சீர்திருத்தி உங்களுக்கு உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர் நிச்சயமாக மாபெரும் வெற்றியினை அடைவார். (33:71,72)*

இந்த வசனங்களில் இறைவன் இறையச்சத்தைப் பேணுவதன் பக்கம் கவனமூட்டியவாறு சரியானதும் உண்மையானதுமான வார்த்தையைப் பேசும்படியும், தூய்மையான நேரானவற்றையே கூறும்படியும் கட்டளையிடுகின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:**

கவ்லே ஸதீது என்பது முற்றிலும் நேர்மையான அறிவுப்பூர்வமான சொற்களை நாவால் பேசுவதாகும். வீணான தேவையில்லாதவையும் பொய்யும் எவ்வகையிலும் இதில் இருக்கக்கூடாது.

நம்பிக்கை கொண்டவர்களே! இறைவனுக்கு அஞ்சுங்கள். உண்மையான, நேர்மையான, ஞானம் நிறைந்த பேச்சுக்களைப் பேசுங்கள்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

வீணான பேச்சுக்களைப் பேசாதீர்கள். இடம் மற்றும் சந்தர்ப்பம் ஆகியவற்றிற்கேற்ப பேசுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ள இந்த அனைத்து கட்டளைகளிலிருந்தும் இறைவனின் கட்டளைக்கேற்ப தக்வாவை பெறுவது என்பது, கடினமான நிலைமையிலும், எளிதான நிலைமையிலும், அவர் தீர்ப்பளிக்கின்ற போதும், சாட்சி கூறும் போதும் வீட்டில் குழந்தைகளுடன் பேசும் போதும், அவர்களுடைய விவகாரங்களிலும் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடன் உள்ள விவகாரங்களிலும், வியாபாரத்தின் போது ஒரு பொருளை வாங்கும் போதும் விற்கும் போதும், ஒருவர் ஓரிடத்தில் வேலை செய்யும்போதும் உண்மையில் எப்போதும் நிலைத்திருப்பதும், எவரிடம் அவர் வேலை செய்கின்றாரோ அவருடன் உள்ள விவகாரங்களிலும் உண்மையை நிலைநாட்டுவதும் சுருக்கமாக அன்றாடம் நடைபெறுகின்ற ஒவ்வொரு பணிகளிலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முற்றிலும் உண்மையான பேச்சுக்களையே நாவால் பேச வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிடுகின்றான். அந்தப் பேச்சுக்களில் எவ்வித சந்தேகமும் இருக்கக் கூடாது. ஒவ்வொருவரும் தங்களது விருப்பத்திற்கேற்ப பொருள் கூறும் வகையில் அவர் கூறும் கூற்றில் சந்தேகங்கள் இருக்கக் கூடாது. அவர் கூறும் சொற்கள் எந்த அளவு உண்மையானதாக இருக்க வேண்டும் என்றால், அந்த உண்மையைக் கூறுவதன் மூலம் அவருக்கு இழப்பு ஏற்பட்டாலும் அவர் அதனை சகித்துக் கொள்ள வேண்டும். ஆனால், நேர்மையான கூற்றுக்களைக் கூறுவது,

உண்மையை கூறுவது ஆகியவற்றிற்கு களங்கம் ஏற்படாமல் அவர் பார்த்துக் கொள்ள வேண்டும். அன்றாடம் நடக்கின்ற விவகாரங்களில் சற்று தவறான கூற்றுகளைக் கூறுவதால் வித்தியாசம் எதுவும் ஏற்படப் போவதில்லை என்று சிலர் கருதுகின்றனர்.

ஆனால் அல்லாஹ் கூறுகின்றான்: நிச்சயமாக இதில் வித்தியாசம் உள்ளது. இதனால் தீங்கு ஏற்படும். இதனால் உங்களது இறையச்சத்தின் தரம் குறைந்து விடும். தக்வாவின் தரம் குறைந்து கொண்டே செல்லும்போது ஒரு சமயத்தில் அது உங்களை தவறான கூற்றைக் கூறுவது, பொய் கூறுவது ஆகியவற்றிற்கு அருகில் கொண்டு சென்று விடும் அல்லது மனிதன் உண்மையை விட்டும் முற்றிலும் விலகி வெகுதூரம் சென்று விடுவான். பிறகு பொய்யில் அவன் மூழ்கி விடுவான். பிறகு இறைவனை விட்டும் அவர் விலகி வெகுதூரம் சென்று விடுவார். அல்லது உண்மையில் மனிதன் நிலைத்திருக்காமல் இருந்ததன் காரணமாக அல்லாஹ்வின் தரப்பிலிருந்தும் அவன் நிராகரிக்கப்பட்டவனாக ஆகி விடுவான்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் மூஃமினாக இருந்தால் இறையச்சத்தை மேற்கொண்டு நடந்தவாறு நேர்மையான கூற்றுகளைக் கூறுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த சொற்களை நாம் நாவால் கூறுகின்றோமோ அது அறிவுப்பூர்வமானதாக இருக்க வேண்டும் என்பதும் கவ்லே ஸதீது என்பதன் பொருளாகும். சில கூற்றுக்கள் உண்மையானதாக இருக்கும். ஆனால் அதை சொல்ல வேண்டும் என்பது அவசியமானதாக இருக்காது. அது அறிவுப்பூர்வமான கூற்றின் தரத்தை உடையதாக இருக்காது. அது குழப்பத்திற்குக் காரணமானதாக ஆகிவிடும். ஒருவரின் இரகசியத்தை மற்றவரிடம் கூறுவதன் மூலம் உறவுகளில் விரிசல் ஏற்பட்டு விடும். தொடர்புகளில் மோசமான நிலை ஏற்படும்.

ஆனால், இவ்வாறும் நடக்கின்றது. அதாவது ஒரு விசயம் ஓரிடத்தில் பேசப்படுவது அறிவுப்பூர்வமான செயலாக இருக்காது. ஆனால் அதே விசயத்தை மற்றொரு இடத்தில் வேறொரு சந்தர்ப்பத்தில் பேசுவது அவசியமானதாக ஆகி விடுகின்றது. உதாரணமாக காலத்தின் கலீஃபாவிடம் சில விசயங்கள் கொண்டு வரப்படுகின்றன. அது சீர்திருத்தத்திற்காக உள்ளவையாகும். அப்படிப்பட்ட விசயங்கள் எல்லா இடத்திலும் பேசக்கூடியவை அல்ல. ஆனால் அவ்விசயங்கள் இங்கு என்னிடம் வரும்போது அவை கூறுவதற்கு தகுதியுடைய விசயங்களாக இருக்கின்றன. எனவே ஒரே விசயம் ஓரிடத்தில் அது கூறப்படும்போது அது குழப்பத்திற்கு காரணமாக ஆகி விடுகின்றது. அதே விசயம் இன்னொரு இடத்தில் கூறப்படும்போது அது சீர்திருத்தத்திற்குக் காரணமாக ஆகி விடுகின்றது.

பிற அறிவுப்பூர்வமான விசயங்கள் என்றால் என்ன? என்பதையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்கிக் கூறிவிட்டார்கள். அதாவது நேர்மையான கூற்று என்ற பெயரில் வீணான தேவையில்லாத எந்த வார்த்தையையும் கூறக்கூடாது. சிலர் பேசுகின்ற போது சரியானவற்றைத்தான் பேசுவார்கள். தங்களது எண்ணத்தில், சீர்திருத்தம் செய்கின்றோம் என்ற பெயரில் அவர்கள் அதனை மற்றவர்களுக்கு கூறுகின்றனர். ஆனால் அவற்றிற்கு தங்களது சுய விளக்கங்களைக் கூறுவதன் மூலம் அதிகப்படியான சொற்களை அதில் சேர்த்து விடுகின்றனர். பிறகு அது கவ்லே ஸதீத் அதாவது உண்மையான நேர்மையான கூற்றாக இருக்க முடியாது. சில நிலைமைகளில் நேர்மையான கூற்றைக் குலைக்கக்கூடியதாக அது இருக்கும். ஒரு சரியான பேச்சில், ஒரு சொல் கூட்டிக் கூறப்படும் போது, சீர்திருத்தம் செய்பவர்களின் பார்வையில் அது வரும்போது அல்லது சில நேரங்களில் அப்படிப்பட்ட விசயங்கள் என்னிடம் கூறப்படும் போது அது உண்மையை விட்டும் வெகுதூரம் கொண்டு சென்று விடுகிறது. அதன் விளைவாக சீர்திருத்தத்தின் சரியான வழிமுறையை மேற்கொள்வதற்குப் பதிலாக தவறான வழிமுறை கடைபிடிக்கப்படுகின்றது. அதன் விளைவாக சீர்திருத்தம் ஏற்படுவதற்குப் பதிலாக இழப்பு ஏற்பட்டு விடுகின்றது.

சில நேரங்களில் மென்மையாகப் புரிய வைப்பதன் மூலமாவும் அல்லது கண்டும் காணாமல் விட்டு விடுவதன் மூலமாகவும் அல்லது மிகவும் சாதாரணமான முறையில் கடிந்து கொள்வதன் மூலமாகவும் சீர்திருத்தம் ஏற்பட்டு விடலாம். ஆனால் ஒரு தவறான சொல் தீர்ப்பு வழங்குபவரை கடினமான தீர்ப்பை வழங்குமாறு செய்து விடலாம். அதன் விளைவாக சீர்திருத்தம் ஏற்படுவதற்குப் பதிலாக இழப்பு ஏற்பட்டு விடலாம். எனவே தான் சத்தியத்தைக் கூறும்போது உண்மையைக் கூறும் போது அதை நுட்பமான ஞானத்துடன் கூறுவதை கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். ஞானத்துடன் அது கூறப்பட்டால் தான் அது கவ்லே ஸதீது ஆக அதாவது நேர்மையான கூற்றாக இருக்க முடியும். ஞானத்துடன் கூறுவது என்பது அதன் மூலம் சமுதாயத்தின் சீர்திருத்தமும் அமைதியும் ஒவ்வொரு மட்டத்திலும் ஏற்பட வேண்டும். இது நோக்கமாக இருக்க வேண்டும். குழப்பம் நோக்கமாக இருக்கக் கூடாது.

இந்த ஞானத்தைக் கருத்தில் கொண்டவாறு நான் ஏற்கனவே கூறியது போன்றே இடம் மற்றும் சந்தர்ப்பம் ஆகியவற்றிற்குப் பொருத்தமானவற்றைக் கூற வேண்டும். ஞானமில்லாமலும் இடம் மற்றும் சந்தர்ப்பம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமலும் கூறப்படுகின்ற ஒவ்வொரு உண்மையான கூற்றும் கவ்லே ஸதீது ஆக அதாவது நேர்மையான உண்மையான கூற்றாக இருக்க முடியாது. இது இறைவனது திருப்தியைப் பெறுவதற்குப் பதிலாக ஒரு மனிதனை அல்லாஹ்வின் வெறுப்பிற்குக் காரணமானவனாக ஆக்கி விடும்.

எனவே ஒரு நம்பிக்கையாளர் இறையச்சத்திற்கேற்ப நடந்தவாறு கவ்லே ஸதீது என்னும் நேர்மையான கூற்றின் நுட்பமானவற்றைக் கருத்தில் கொள்வது அவசியமானதாகும். தக்வாவின் நுட்பமான கருத்தைப் பார்க்க வேண்டியது அவசியமானதாகும். நுட்பமான முறையில் இதை பார்த்தால் பிறகு அல்லாஹ்வின் அன்பின் பார்வை அத்தகைய மனிதன் மீது இருக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் இறையச்சத்தின் நுட்பமான விசயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். இரட்சிப்பு இதில் தான் இருக்கின்றது. சிறிய சிறிய விசயங்களைப் பொருட்படுத்தாமல் விட்டு விட்டால் பிறகு ஒருநாள் இதே சிறிய சிறிய விசயங்கள் பெரும் பாவங்களைச் செய்ய வைத்து விடும். இயல்பில் சோம்பேறித்தனமும் எதையும் பொருட்படுத்தாத நிலையும் உருவாகி பிறகு அப்படிப்பட்ட மனிதன் அழிந்து போய் விடுவான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறையச்சத்தின் உயர்வான தகுதிகளைப் பெறுவது உங்களது பார்வையில் இருக்க வேண்டும். இதற்காக இறையச்சத்தின் நுட்பமான விசயங்களைக் கருத்தில் கொள்வது அவசியமானதாகம்.

**பிறகு இன்னொரு ஹதீஸில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உண்மையான மகிழ்ச்சி மற்றும் நிம்மதி ஆகியவை இறையச்சம் இல்லாமல் கிடைக்க முடியாது. இறையச்சத்தில் நிலைநிற்பது என்பது விசமுள்ள பானத்தை அருந்துவதாகும். அது மிகவும் கடினமான காரியமாகும். தக்வாவில் நிலைநின்றவாறு உண்மையான கூற்றுக்களைப் பேசுவது கூட மனிதனை சில சமயங்களில் துன்பத்தில் ஆழ்த்தி விடுகின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறையச்சமுடையவருக்கு அல்லாஹ் எல்லா விதமான சுகத்தையும் தருகின்றான்.

مَنْ يَتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهُ مَخْرَجًا ۙ وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

*அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவான். அவர் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவருக்கு உணவு அளிப்பான். (65:3,4)*

எனவே, மகிழ்ச்சியான நிலைமையை இறையச்சத்தின் மூலமாகவே பெற முடியும். தக்வாவை பெற்றுக் கொள்வதற்காக நாம் நிபந்தனைகளை விதித்துக் கொண்டு செல்லக் கூடாது. இறையச்சத்தை மேற்கொள்வதன்

மூலமாக நீங்கள் கேட்பது உங்களுக்கு கிடைத்து விடும். இறைவன் கருணைமிக்கவனாகவும் பரிவுடன் நடந்து கொள்பவனாகவும் இருக்கின்றான். தக்வாவை பேணும் போது நீங்கள் விரும்புவதை அவன் உங்களுக்கு வழங்குவான்.

தக்வாவை கருத்தில் கொள்ளும் போது மனிதனின் ஒவ்வொரு பணியும் நல்ல முறையில் நடக்கும். அது உண்மையைக் கடைபிடிப்பதாக இருந்தாலும் வேறு செயல்களைச் செய்வதாக இருந்தாலும் சரியே! எனவே, அல்லாஹ்வின் எந்தக் கட்டளைகளையும் சாதாரணமானதாகக் கருதக் கூடாது.

கவ்லே ஸதீது அதாவது சரியான உண்மையான கூற்றுக்களைக் கூற வேண்டும் என்ற இந்த கட்டளை எப்படிப்பட்டதென்றால் இதில் தான் சமுதாயத்தின் அமைதியின் அடித்தளம் உருவாகின்றது. மேலும் சமுதாயத்தின் சீர்திருத்தத்தின் அடித்தளம் இதில்தான் இருக்கினறது. அதனால் தான் இஸ்லாத்தில் ஆணையும் பெண்ணையும் நிகாஹ் என்னும் திருமண ஒப்பந்தம் மூலம் இணைப்பதற்கான அறிவிப்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்யும் போது இந்த வசனங்களை ஓதியுள்ளார்கள். திருமணத்தின் மூலமே வருங்கால தலைமுறையின் தொடர் ஆரம்பமாகின்றது. இதன் வட்டம் வீடு என்கின்ற எல்லைக்குட்பட்ட ஒன்றல்ல. மாறாக அது முழு சமுதாயத்திலும் பரவி நிற்கின்றது. இதன் மூலமாக சமுதாயத்தில் குழப்பத்தையும் உருவாக்க முடியும். அமைதியையும் சாந்தியையும் உருவாக்க முடியும். எனவே இவற்றில் இறைவன் விரும்புவது போல் செயல்படுவது மிகவும் அவசியமானதாகும்.

**அல்லாஹ் இதற்கு அடுத்த வசனத்தில் கூறுகின்றான்:** தக்வாவின் நுட்பமான வழிகளைத் தேடுவதில் நீங்கள் செய்யும் முயற்சிகள், சரியான உண்மையான கூற்றைக் கூறுவதன் எல்லா அம்சங்களிலும் நிலைத்திருப்பதற்காக நீங்கள் செய்யும் முயற்சிகள் உங்களை அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக்கி விடும். அல்லாஹ் உங்களது செயல்களைச் சீர்திருத்துவான். உண்மையைக் கடைபிடிப்பதன் மூலம் நீங்கள் நல்ல செயல்களைச் செய்வீர்கள். நேர்மையான கூற்றுக்களைக் கூறுவதன் மூலம் பிறகு நீங்கள் வீணானவற்றிலிருந்தும் தவிர்ந்து கொள்பவர்களாக ஆகிவிடுவீர்கள். வீணான காரியங்களிலிருந்து விலகி இருப்பது தாமாகவே உங்களை நற்செயல்களின் பக்கம் கொண்டு சென்றுவிடும். தீமைகளிலிருந்து உங்களை விலக்கி விடும்.

ஒரு பிரசித்தி பெற்ற நபிமொழி ஒன்று இருக்கின்றது. அதை அதிகமாக நாம் கேட்டிருக்கின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நபரிடம் எப்போதும் உண்மையில் நிலைத்திருப்பீர்கள் என்ற உடன்படிக்கையை இன்று நீங்கள் செய்யுங்கள். ஒருபோதும் பொய் சொல்லக் கூடாது. இதற்கேற்ப செயல்பட்டால் உமக்கு நற்பலன் கிடைக்கும். உமது தீமைகள் உம்மிடமிருந்து விலகி விடும் என்று கூறினார்கள். அந்த நபர் பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டவாறு, தான் செய்த எல்லா விதமான சிறிய மற்றும் பெரிய பாவங்களிலிருந்தும் விடுபட்டார்.

மனிதன் தீமைகளிலிருந்தும் பாவங்களிலிருந்தும் விடுபடுகின்ற போது இறைவனது வாக்குறுதியும் அவனது செயலும் அம்மனிதன் சீர்திருந்துவதற்கான நல்வாய்ப்பை வழங்குகிறது. இவ்வாறு அந்த மனிதன் பொருத்தமாக நற்செயல்களைச் செய்பவர்களில் ஒருவராக ஆகி விடுகின்றான். இப்போது அவன் செய்கின்ற நற்செயல்களுக்குரிய கூலி மட்டும் தான் கிடைக்கும் என்பதல்ல. மாறாக, இறையச்சத்திற்கேற்ப நடப்பவரும் உண்மையில் நிலைத்திருப்பவரும் தங்களது கடந்த கால பாவங்களையும் கூட அல்லாஹ் மன்னிக்குமாறு செய்து விடுகின்றார்.

**அல்லாஹ் கூறுகின்றான்:** உங்களது செயல்களில் சீர்திருத்தம் ஏற்படுவது மட்டுமல்லாமல் *உங்களது கடந்த கால பாவங்களையும் அல்லாஹ் மன்னித்து விடுவான். (33:71)* அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளுக்கேற்ப நீங்கள் செயல்பட்டால் இறையச்சத்தில் நிலைத்து நின்றால் நன்மைகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பை பெற்றுக் கொண்டிருந்தால், குழப்பங்களில் இருந்து விலகியிருந்தால், ஒரு நம்பிக்கையாளர் உண்மையான நம்பிக்கையாளராக ஆவதற்கு இறைவன் கூறியுள்ள கட்டளைகளைச் செயல்படுத்தி வந்தால் – இது தொடர்பாக ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் வலியுறுத்திக் கூறியவாறு இவ்வாறு கவனமூட்டியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் கூறியுள்ள 700 கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டால் தான் நீங்கள் உண்மையான நம்பிக்கையாளர் என்று அழைக்கப்படுவீர்கள். இவ்வாறு உண்மையான நம்பிக்கையாளராக ஆகிவிட்டால் அதன் விளைவாக எதிர்காலத்தில் செய்யும் பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும். எதிர்காலத்தில் மனிதன் பாவங்களைச் செய்து கொண்டே செல்லும் போது அல்லாஹ் அவற்றை மன்னித்து கொண்டே இருப்பான் என்று இதற்கு பொருளல்ல. மாறாக, நற்செயல்களின் காரணமாகவும் தனது நஃப்ஸை சீர்திருத்துவதன் காரணமாகவும் பாவங்களிலிருந்தும் அவன் வெகுதூரம் விலகிச் சென்று விடுகின்றான். இஸ்திக்ஃபார் செய்வதன் மூலம் இறைவன் புறமிருந்து மனிதனுக்கு அவனது பாவங்களை எதிர்த்து நிற்கின்ற ஆற்றல் கிடைக்கின்றது.

எனவே அல்லாஹுத்தஆலா يَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ என்று கூறியதன் பொருள் கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்படுவதும் எதிர்காலத்தில் பாவங்களை எதிர்த்து நிற்கின்ற ஆற்றல் கிடைப்பதுமாகும். தொடர்ச்சியாக பொருத்தமான நற்செயல்களை அவனால் செய்ய முடிகின்றது. அது அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கின்றது. இது ஃபவ்ஸே அஸீம் அதாவது மிகப்பெரும் வெற்றியாகும் என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது மனிதன் இறைவனுடைய திருப்தியைப் பெறக்கூடியவனாக ஆவதே மிகப்பெரிய வெற்றியாகும். மகத்தான வெற்றியைப் பெறுவதற்கு அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பது அவசியமானதாகும். தங்களது வாழ்க்கையை அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளுக்கேற்ப வடிவமைத்துக் கொள்வது அவசியமானதாகும். இதற்கேற்ப செயல்படுவதற்கு இறைவனிடம் ஆற்றலை வேண்டுவது அவசியமானதாகும். இந்த ஆற்றல் இஸ்திக்ஃபார் மூலமாகவே கிடைக்கிறது. இந்த ஆற்றல் கிடைத்து விட்டால் பிறகு நற்செயல்களும் அவர் மூலம் வெளிப்படும். பிறகு அல்லாஹ் தனது அருளால் நற்செயல்களின் பக்கம் வழிகாட்டவும் செய்வான். பிறகு அப்படிப்பட்ட மனிதன் உண்மையில் நிலைத்து நின்றவாறு உண்மையைப் பரப்புகின்ற உண்மையான நம்பிக்கையாளர்களில் ஒருவராக ஆகிவிடுவார். அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்ற நம்பிக்கையாளர்களில் ஒருவராக அவர் இருப்பார். எனவே, இறையச்சம் மகத்தான வெற்றியின் பக்கம் மனிதனை கொண்டு செல்கிறது. மேலும் மகத்தான வெற்றியைப் பெறுபவர்கள் இறையச்சம் உடையவர்களாக இருப்பார்கள்.

**அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:**

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் உண்மையான நம்பிக்கையாளராக ஆக வேண்டும் என்றால், உங்கள் வாழ்வின் நோக்கமாக இதனை நீங்கள் செய்ய வேண்டும். இவற்றைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

**இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வேறு சில மேற்கோள்களை உங்களுக்கு எடுத்துக் கூறுவேன்.**

உண்மையை வெளிப்படுத்திக் கூறுவது தொடர்பாக அதை எப்படி செய்ய வேண்டும்? எந்த சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டும்? அதன் பல்வேறு நிலைகள் என்ன? என்பதைப் பற்றி **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

அசல் விசயம் என்னவென்றால், தொலைநோக்குப் பார்வை இருப்பது நல்லது தான். மனிதன் தனக்குள்ளேயே இந்தக் கூற்று உண்மையானது என்பதைப் புரிந்து கொள்கின்றான். எவரைப் பற்றியாவது ஒருவர் ஏதாவது கூறும் போது, மனிதனிடம் தொலைநோக்குப் பார்வை இருந்தால் அவற்றை அவன் புரிந்து கொள்கின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உண்மை என்பதில் தைரியமும் வீரமும் இருக்கும். பொய்யனாக இருக்கும் மனிதன் கோழையாக இருக்கின்றான். எவரது வாழ்க்கை அசுத்தம், அழுக்கு, பாவங்கள் நிறைந்தவையாக இருக்கின்றதோ அவர் எப்போதும் பயந்து கொண்டே இருப்பார். அவரால் அவற்றை எதிர்த்து நிற்க முடியாது. ஒரு உண்மையான

மனிதனைப் போன்று தைரியத்துடனும் வீரத்துடனும் தனது உண்மையை அவரால் வெளிப்படுத்த முடியாது. தனது தூய்மைக்கான ஆதாரத்தை அவரால் வழங்க முடியாது. உலக விவகாரத்தை சிந்தித்துப் பாருங்கள். எவருக்கு இறைவன் ஓரளவு வளமான நிலைமையை வழங்கியுள்ளானோ அவரைப் பார்த்து பொறாமைப்படுபவர் இல்லாமல் இருக்க முடியுமா? வளமான நிலைமையில் இருக்கின்ற ஒவ்வொருவரையும் பார்த்து பொறாமைப்படுகின்றவர் இருப்பார். அப்படிப்பட்டவர்கள் அவர்களுடன் இருப்பார்கள். மார்க்கத்தின் நிலையும் இப்படித்தான் இருக்கும். சய்த்தானும் சீர்திருத்தத்தின் எதிரியாக இருக்கின்றான். எனவே, மனிதன் தனது கணக்கை சரியாக வைத்திருக்க வேண்டும். இறைவனுடன் உள்ள உங்களது விவகாரத்தை சரியாக வைத்திருக்க வேண்டும். சய்த்தான் எப்போதும் உடன் இருந்து வருகின்றான். ஆனால் மனிதனுக்குள்ளே உண்மை இருந்தால், அல்லாஹ்வுடன் உள்ள விவகாரங்களை அவன் சரியாக வைத்திருந்தால் பிறகு எந்த கவலையும் இருக்காது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:** இறைவனை திருப்திப்படுத்துங்கள். பிறகு எவருக்கும் அஞ்ச வேண்டாம். எவரையும் பொருட்படுத்தவும் வேண்டாம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:** தாமாகவே தண்டனையை வரவழைத்துக் கொள்கின்ற காரியங்களில் இருந்தும் விலகி இருக்க வேண்டும்.

மனிதன் தாமாகவே தவறுகள் செய்யும் போது தான் தண்டனை கிடைக்கின்றது. மனிதன் உண்மையில் நிலைத்திருந்தால், நன்மைகளில் நிலைத்திருந்தால், பொருத்தமான நற்செயல்களைச் செய்பவனாகவும் தீமைகளிலிருந்து விலகி இருப்பவனாகவும் மனிதன் இருந்தால் பிறகு இத்தகைய தண்டனைகள் வராது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இவை யாவும் தாமாகவே கிடைத்து விட முடியாது. இவை யாவும் மறைவான உதவி இல்லாமலும், அல்லாஹ் தவ்ஃபீக் வழங்காமலும் கிடைக்க முடியாது. அல்லாஹ்வின் உதவியும், நல்வாய்ப்பும் இருந்தால்தான் இது கிடைக்கும். அதற்காக இஸ்திக்ஃபார் செய்வதுடன் அவன் பக்கம் திரும்ப வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனது அருள் இல்லாமல் மனிதனுடைய முயற்சிகள் மட்டும் எதையும் உருவாக்கி விட முடியாது.

மனிதன், நான் இதை செய்து விடுவேன்; அதை செய்து விடுவேன் என்று கூறுகின்றான். மார்க்க விசயங்களில் மனித முயற்சிகள் மட்டும் முற்றிலும் எதையும் உருவாக்கி விட முடியாது. அல்லாஹ்வின் அருள் இருந்தால் தான் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைக்கின்றது. மேலும் அல்லாஹ்வின் திருப்தியும் கிடைக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனது அருள் இல்லாமல் மனிதனது முயற்சிகள் எதையும் செய்து விட முடியாது.

خُلِقَ الْإِنْسَانُ ضَعِيفًا ***மனிதன் பலவீனமானவன் ஆவான். (4:29)*** தவறுகளால் நிரப்பப்பட்டிருக்கின்றான். நாலாபுறமும் துன்பங்கள் அவனை சூழ்ந்துள்ளன. எனவே அல்லாஹுத்தஆலா நன்மைகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்கவும் மறைவான உதவி மற்றும் அவனது நீடித்திருக்கும் அருள்களுக்கு நம்மை வாரிசாக்குவதற்கும் துஆ செய்ய வேண்டும். எனவே இவற்றை எப்போதும் நம் கண்முன் வைத்து செயல்பட வேண்டும். உலக விவகாரங்களிலும் மார்க்க விவகாரங்களிலும் துன்பங்கள் வரும். ஒவ்வொரு இடத்திலும் நாம் உண்மையில் நிலைத்திருந்தால், இறையச்சத்தில் நிலைத்திருந்தால், நமது செயல்களின் பக்கம் பார்வை இருந்தால் பிறகு இந்த துன்பங்களும் அல்லாஹ்வின் அருளால் விலகிச் சென்று விடும்.

அவர்கள் கூறியிருப்பது போன்றே உண்மையை வெளிப்படுத்திக் கூறுவது செயலளவில் பார்க்கும் போது மனிதனை அது துன்பத்தில் ஆழ்த்தி விடுகின்றது. ஆனால் அகமும் புறமும் ஒன்றாக இருந்தால் பிறகு பயப்பட வேண்டிய தேவையில்லை. பிறகு துன்பங்களும் மறைந்து விடும். இது எதிரிகளிடமிருந்து மட்டும் ஏற்படுவதல்ல. சில நேரங்களில் நம்மவர்களிடத்தில் உண்மையை வெளிப்படுத்திக் கூறுவது கூட நம்மை துன்பத்தில் ஆழ்த்தி

விடலாம். ஏனென்றால் நம்மவர்களில் கூட பல வகையான மக்கள் இருக்கின்றனர். இறையச்சத்தில் குறைவு இருக்கும். இதனால் சில சமயங்களில் மனிதன் நம்மவர்கள் மூலமாகவும் கவலையில் ஆழ்ந்து விடுகின்றான்.

உதாரணமாக முழு உலகிலும் ஜமாஅத்துகளில் இப்போது தேர்தல்கள் நடந்து வருகின்றன. எனக்கு சில புகார்கள் வந்துள்ளன. நாங்கள் இன்ன மனிதருக்கு ஓட்டு போட்டோம். அப்போது வேறொரு பொறுப்பாளர் என்னிடம் இவருக்கு நீங்கள் ஏன் ஓட்டு போட்டீர்கள்? என்று கேட்டார். ஜமாஅத் தேர்தல்கள் எப்படிப்பட்டதென்றால், ஒவ்வொருவரும் இதில் சுதந்திரமாக செயல்படக் கூடியவராக இருக்கின்றார். எவருக்கும் இதில் கேள்வி கேட்பதற்கான உரிமை இல்லை. ஒருவர் உண்மையாகவே ஒருவரை சிறந்தவர் என்று கருதியவாறு அவருக்கு ஓட்டு போட்டால் எந்தவொரு பொறுப்பாளருக்கும் நீங்கள் இவருக்கு ஏன் ஓட்டு போட்டீர்கள்? இவருக்கு ஏன் ஓட்டுப் போடவில்லை? என்று கேட்பதற்கான உரிமை இல்லை. மனிதனிடம் பலவீனம் இருந்தால், தவறுகள் இருந்தால் ஒருமுறை அவன் உண்மையை வெளிப்படையாகக் கூறிய பிறகு அடுத்த முறை அவர் உண்மையை வெளிப்படையாகக் கூறமாட்டார். எனது பலவீனம் மற்றும் தவறின் காரணமாக நான் பிடிபட்டு விடக்கூடாதே! என்று அவர் நினைப்பார் அல்லது இறையச்சத்தில் குறைவு இருந்தால் பிறகு இவ்வாறும் சிலர் தமது கருத்தை தெரிவித்து விடுகின்றனர். அதாவது இந்த பொறுப்பாளர் தமது உள்ளத்தில் பகைமையை வைத்தவாறு செயல்படக்கூடாதே! என்ற கவலை எங்களுக்கு இருக்கின்றது என்று கூறுகின்றார். இறையச்சத்தில் குறைவு ஏற்பட்டதால் உண்மையை வெளிப்படுத்துவதில் குறைவு ஏற்பட்டதால் இவ்வாறு கூறுகின்றனர்.

எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். உண்மை என்று புரிந்தவாறு ஒருவர் தொடர்பாக நாம் நமது கருத்தை வெளிப்படுத்திக் கூறி விட்டால் பிறகு அதைப் பற்றி கவலைப்படாமல் இருப்பது தான் உண்மையில் நிலைத்திருப்பதாகும். அதுதான் இறையச்சமாகும்.

ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்று அல்லாஹ்விடம் அவனது அருளை கேட்க வேண்டும். அல்லாஹ்வின் அருள் இருந்தால் யாராலும் எதையும் செய்துவிட முடியாது. அத்தகைய பகை உணர்வு வைத்திருப்பவர்களுக்கு எதிராக இறைவனது விதியும் சில நேரங்களில் செயல்படுகிறது. தனது உள்ளம் விரும்புவது போல் நடந்து கொள்வது ஜமாஅத் அமைப்பிற்கு மாற்றமானதாகும். எங்காவது ஓரிடத்தில் ஏதாவது ஒரு பிடியின் கீழ் மனிதன் வந்து விடுகின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பொதுவான பார்வையில் நாம் பார்க்கும் போது மக்கள் லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றனர். இறைதூதர் (ஸல்) அவர்களது உண்மைக்கு தமது நாவால் சாட்சி கூறுகின்றனர். வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர்கள் தொழுகின்றனர். நோன்பும் வைக்கின்றனர். ஆனால் ஆன்மீகத்தின் அசல் அவர்களிடம் முற்றிலும் இல்லாமல் ஆகி விட்டது. மறுபுறம் அந்த பொருத்தமான நற்செயல்களுக்கு எதிராக அவர்கள் செயல்படுவதே அவரது செயல்கள் பொருத்தமான நற்செயல்களாக இல்லை என்பதற்கு சாட்சி பகர்கின்றன. அவை சடங்கு அல்லது பழக்கத்தில் உள்ளது என்ற ரீதியில் செய்யப்படுகிறது. அவற்றில் அணு அளவு கூட மனத்தூய்மையும் ஆன்மீகமும் இல்லை. அவ்வாறில்லையென்றால் இந்த பொருத்தமான நற்செயல்களின் அருள்களும் ஒளிகளும் அதனோடு இல்லாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். எதுவரை உண்மையான உள்ளத்துடனும் ஆன்மீகத்துடனும் இந்த செயல்கள் இல்லையோ அதுவரை எந்தப் பலனும் ஏற்படாது. இந்த செயல்களால் எதுவும் ஏற்படாது. பொருத்தமான நற்செயல்களில் எந்தவிதமான குழப்பமும் இல்லாமல் இருக்கும் போது தான் பொருத்தமான நற்செயல்கள் என்று அவை கூறப்படும். ஸூலாஹ் அதாவது சீர்திருத்தம் என்பதன் எதிர்பதம் ஃபசாத் அதாவது குழப்பம் ஆகும். எனவே குழப்பங்களிலிருந்து தவிர்ந்திருப்பவரும் விலகியிருப்பவரும் தான் நல்லவராவார். சிறிய சிறிய விசயங்களுக்கு கூட நடவடிக்கை என்று ஆரம்பமாகி விட்டால் அதன் காரணமாக மக்களை அச்சத்திற்கு ஆளாக்கினால் அதுவும் குழப்பம் தான். இவற்றை மனிதன் கண்முன் நிறுத்தியவாறு இவற்றைப் பற்றி ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அதாவது நாம் பொருத்தமான நற்செயல்களைச் செய்ய வேண்டும். இறைவன் விரும்பும்போது தான் நமது செயல்களில் சீர்திருத்தம் ஏற்படும்.

இறையச்சமுடையவர்களின் அடையாளமாகவும் இறையச்சத்தின் நுட்பமான வழிகளில் செல்பவர்களது அடையாளமாகவும் எதை வைத்துள்ளான் என்றால் ஒரு செயல் அல்லாஹ்வின் பார்வையில் பொருத்தமான நற்செயலாக இருக்காத வரை அந்த செயல் நன்மையான செயலாக இருக்க முடியாது. அல்லாஹ்வின் பார்வையில் நமது செயல் பொருத்தமான நற்செயலாக ஆவதற்காக அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதும் அவன் முன்னால் குனிவதும் அவசியமானதாகும். இஸ்திக்ஃபார் செய்வது அவசியமானதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

வெறும் நாவால் மட்டும் கலிமா கூறுவது போதுமானது அல்லது அஸ்தக்ஃபிருல்லாஹ் என்று கூறுவது மட்டும் போதுமானது என்று மனிதன் நினைக்கின்றான். ஆனால், நினைவில் கொள்ளுங்கள்! நாவால் சில சொற்களைக் கூறுவது மட்டும் போதுமானதல்ல. மனிதன் தனது நாவால் ஆயிரம் முறை அஸ்தக்ஃபிருல்லாஹ் என்று கூறினாலும், ஆயிரம் முறை தஸ்பீஹ் செய்தாலும் அதனால் எந்த பயனும் ஏற்படாது. ஏனென்றால் இறைவன், மனிதனை மனிதனாகப் படைத்துள்ளான். கிளியாகப் படைக்கவில்லை. தனது நாவால் கூறியவற்றையே மீண்டும் மீண்டும் கூறுவது கிளியின் வேலையாகும். அது எதையும் புரிந்து கொள்ளாது. எதை நாவால் கூறுகின்றோமோ அதைப் பற்றி சிந்தித்துக் கூறுவது மனிதனின் பணியாகும். பிறகு அதற்கேற்ப அவன் செயல்படவும் வேண்டும். ஆனால் கிளியைப் போன்று அவன் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தால் உள்ளம் அதனோடு இல்லாமலும் அதற்கேற்ப செயல்படாமலும் இருந்து வெறும் நாவால் கூறுவதால் மட்டும் எந்த அருளும் கிடைக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது வெறும் வார்த்தைகளாகவே கருதப்படும். அதில் எந்த சிறப்பும் அருளும் இருக்காது. இந்நிலையில் அவர் திருக்குர்ஆனையே ஓதினாலும் அல்லது இஸ்திக்ஃபார் செய்தாலும் அது வெறும் சொற்களாக மட்டும்தான் இருக்கும். இறைவன் செயல்களையே விரும்புகின்றான்.

எனவே தான் பொருத்தமான நற்செயல்களைச் செய்யுங்கள் என்று அவன் மீண்டும் மீண்டும் கட்டளையிட்டுள்ளான். எதுவரை இது இருக்காதோ அதுவரை இறைவனுக்கு அருகில் செல்ல முடியாது. சில அறிவீனர்கள் இன்று பகல் முழுவதும் இருந்து நாங்கள் திருக்குர்ஆனை ஓதி முடித்து விட்டோம் என்று கூறுகின்றார்கள். இதனால் என்ன பலன் ஏற்பட்டுள்ளது? என்று எவராவது அவர்களிடம் கேட்கட்டும். வெறும் நாவை மட்டுமே நீங்கள் பயன்படுத்தினீர்கள். மற்ற உறுப்புகள் மூலம் எதையும் செய்யாமல் முற்றிலும் அவற்றை விட்டு விட்டீர்கள். ஆனால் அல்லாஹுத்தஆலா எல்லா உறுப்புகளையும் பயன்படுத்துவதற்கே படைத்திருக்கின்றான். இதன் காரணமாகவே ஹதீஸில் இவ்வாறு வருகின்றது. சிலர் திருக்குர்ஆனை ஓதுகின்றனர். ஆனால் குர்ஆன் அவர்கள் மீது சாபமிடுகின்றது. ஏனென்றால் அவர்கள் திருக்குர்ஆனை ஓதுவது வெறும் வார்த்தைகளாக மட்டுமே இருக்கின்றது. அதற்கேற்ப அவர்கள் செயல்படுவதில்லை.

எனவே, வெளிப்படையான அறிவால் மட்டும் செயல்களில் சீர்திருத்தம் ஏற்பட்டு விட முடியாது. மாறாக, உண்மையை கண்முன்னால் வைத்தவாறு அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தை மட்டும் கண்முன்னால் வைத்தவாறு அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்படுவதற்கு முயற்சி செய்யும் போதுதான் அல்லாஹ் தமது வாக்குறுதிக்கு ஏற்ப நமது செயல்களில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துகின்றான். நான் கூறியது போன்றே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது ஜமாஅத்தில் ஒருவர் இணைவதற்கு அல்லது ஜமாஅத்தில் ஒருவர் இணைவதற்குரிய அடையாளமாக அவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளுக்கேற்பவும் செயல்படுபவராக இருப்பார் என்று கூறியுள்ளார்கள். அறிவாளியாகவோ அல்லது ஏதாவது உயர் தகுதியில் இருப்பவராகவோ அவர் இருப்பார் என்று அவர்கள் கூறவில்லை. எனவே நம்மில் ஒவ்வொருவரும் தமது செயல்களின் பக்கம் தமது பார்வையை செலுத்துவது அவசியமானதாகும். இந்த போதனைகளுக்கேற்ப நாம் நம்மை வடிவமைத்துக் கொள்ள வேண்டியதும் அவசியமானதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த நபர் அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்டுள்ள வரம்புகளுக்கேற்ப தனது செயல்களை அமைத்துக் கொள்ளவில்லையோ அவர் கேலி செய்கின்றார். ஏனென்றால், படிப்பது மட்டும் அல்லாஹ்வின் நாட்டமல்ல. மாறாக அவன் செயலை விரும்புகின்றான். ஒருவர் ஒவ்வொரு நாளும் இந்தியாவின் சட்டப்பிரிவு பற்றிய

நூல்களைப் படிக்கின்றார். ஆனால் அந்த சட்டங்களுக்கேற்ப அவர் செயல்படாமல் இருந்தால், மேலும் அவர் இந்த குற்றங்களைச் செய்தவாறும் லஞ்சம் வாங்கியவாறும் இருந்தால் அப்படிப்பட்ட நபர் பிடிக்கப்படும் போது நான் ஒவ்வொரு நாளும் சட்டப் பிரிவு நூலைப் படித்து வருகின்றேன் என்று அவர் கூறும் காரணம் ஏற்றுக் கொள்வதற்குத் தகுதி உடையதாக இருக்குமா? அல்லது தெரிந்து கொண்டே நீ மீண்டும் குற்றமிழைத்திருக்கின்றாய் என்று கூறி அவருக்கு தண்டனை வழங்கப்படுமா? எவர் சட்டத்தைப் பற்றி தெரிந்து நாட்டின் சட்டத்தை எல்லா சமயங்களிலும் படித்துக் கொண்டிருக்கின்றாரே அவர் அதனை படிப்பதால் மட்டும் அவருக்கு வழங்கப்படும் தண்டனையிலிருந்து அவருக்கு மன்னிப்பு கிடைக்காது. சட்டத்தைப் படித்துக் கொண்டே அவர் குற்றமிழைத்தால் அவருக்கு அதிகமாக தண்டனை வழங்கப்படும். நீ அறிந்திருந்தும் இந்த குற்றத்தைச் செய்துள்ளாய். எனவே, ஒரு வருடத்திற்குப் பதிலாக நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை உனக்கு வழங்கப்பட வேண்டும் என்றே கூறப்படும்.

**பிறிதோரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சுருக்கமாக வெறும் வாய் பேச்சு மட்டும் பலன் அளிக்காது. மனிதன் முதலில் தன்னை துன்பத்தில் ஆழ்த்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் அவன் இறைவனை திருப்திப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் அல்லாஹ் அவரது ஆயுளை மேலும் நீட்டி விடுவான். அல்லாஹ்வின் வாக்குறுதியில் மீறுதல் என்பது இருக்காது. அவன்

وَأَمَّا مَا يَنفَعُ النَّاسَ فَيَمْكُثُ فِي الْأَرْضِ

*எந்த பொருள் மக்களுக்கு பயனளிக்கக்கூடியதாக இருக்கின்றதோ அது பூமியில் தங்கி விடுகின்றது (13:18)* என்று வாக்குறுதி அளித்துள்ளான்.

இது முற்றிலும் உண்மையானதாகும். பொதுவாக இதுவே வழிமுறையாக இருந்து வருகிறது. எந்த பொருள் பயனளிக்கக் கூடியதாக இருக்கின்றதோ அதனை யாரும் வீணாக்குவதில்லை. எந்தவொரு குதிரையும், காளை மாடும், பசு மாடும், ஆடும் பயனளிக்கக் கூடியதாக இருந்தால் அதனால் நற்பலன் கிடைத்தால் யார் தான் அவற்றை அறுப்பார்? ஆனால் அவற்றால் எதுவுமே செய்ய முடியாமல் போனால், மேலும் அதனால் எந்தப் பலனும் இல்லையென்றால் அவற்றை அறுப்பது தான் இறுதி சிகிச்சையாகும்.

இவை மிகவும் சிந்திக்கத்தக்க சொற்றொடர்களாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பிறகு அதை அறுப்பவர் எதுவும் கிடைக்கவில்லை என்றால் அவற்றின் தோல் சில ரூபாய்களுக்கு விற்பனையாகி விடும். அதன் மாமிசமும் நமக்கு பயன்படும் என்றே கருதுவார். இவ்வாறே மனிதனும் இறைவனது பார்வையில் எவ்வகையிலும் பயனற்றவனாக ஆகும் போது, அவனது இருப்பால் மற்ற மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாமல் இருந்தால் பிறகு அல்லாஹ் அவனை பொருட்படுத்தமாட்டான். பிறகு அம்மனிதனை அவன் அழித்து விடுகின்றான்.

எனவே ஒவ்வொருவரும் ஒவ்வொரு அஹ்மதியும் ஒவ்வொரு பொறுப்பாளரும் நான் அதிகமாக மற்றவர்களுக்கு எவ்வாறு பலன்தர முடியும் என்று சிந்திக்க வேண்டும். மற்றவர்களுக்கு பயன்தர வேண்டும் என்பதையே ஒவ்வொருவரும் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். இந்த கண்ணியமும், இந்த பொறுப்பும், இந்த தொண்டும் மற்றவர்களுக்கு பயன்தர வேண்டும் என்ற சிந்தனை இருக்கும்போது தான் நற்பலனைத் தரக்கூடியதாக இருக்கும். நல்லெண்ணம் இருக்க வேண்டும். தனது செயல்களைச் சீர்திருத்துவதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும். உண்மையில் நிலைத்திருக்கும் மனிதனாக இருக்க வேண்டும். இறையச்சத்திற்கேற்ப செயல்படுபவராக இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். சொல்லுக்கேற்ற செயல் இல்லாமல் நாவால் பேசுவதும் வெற்று வாதங்கள் புரிவதும் மட்டும் எவ்வித பலனையும் தராது. எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. கை, கால் மற்றும்

ஏனைய உறுப்புகளால் நல்ல செயல்களைச் செய்யாத வரை இது ஏற்படாது. எவ்வாறு அல்லாஹுத்தஆலா திருக்குர்ஆனை இறக்கி சஹாபாக்களை தொண்டு செய்ய வைத்துள்ளான் என்பதைப் பாருங்கள். திருக்குர்ஆனை நாவால் படிப்பது மட்டும் போதுமானது என்று அவர்கள் கருதினார்களா? அல்லது அதற்கேற்ப செயல்படுவது அவசியமானது என்று அவர்கள் கருதினார்களா? அவர்கள் கட்டுப்படுவதையும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதையும் வெளிப்படுத்திக் காட்டினர். அவர்கள் ஆடுகள் போன்று அறுக்கப்பட்டனர். பிறகு அவர்கள் எதனை பெற்றார்களோ, மேலும் இறைவன் அவர்களை எந்த அளவு கண்ணியப்படுத்தி இருக்கின்றானோ அது எவருக்கும் மறைவானதல்ல.

அல்லாஹ் வழங்கும் இத்தகைய கண்ணியத்தையே நாம் தேட வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனது அருளைப் பெற வேண்டும் என்று விரும்புகின்றீர்கள் என்றால் எதையாவது செய்து காட்டுங்கள். அல்லது பயனளிக்காத பொருளைப் போன்று நீங்கள் தூக்கி எறியப்படுவீர்கள். தனது வீட்டிலுள்ள நல்ல பொருள்களை தங்கத்தை, வெள்ளியை எந்த மனிதனும் வெளியில் எறிந்து விட மாட்டான். மாறாக அந்த பொருள்களையும் பயன்தரக்கூடிய விலைமதிப்புள்ள எல்லா பொருள்களையும் நீங்கள் பாதுகாத்து வைக்கின்றீர்கள். ஆனால் வீட்டில் ஒரு எலி செத்து கிடப்பதைப் பார்த்தால் அதை எல்லாவற்றையும் விட முதலாவதாக வெளியில் எறிவீர்கள். இவ்வாறே இறைவன் தனது நல்லடியார்களை எப்போதும் நேசிக்கின்றான். அவர்களது ஆயுளை நீட்டுகின்றான். அவர்களது வியாபாரத்தில் ஒரு பரக்கத்தை வைக்கின்றான். அவர்களை அவன் வீணாக்குவதில்லை. அவமரியாதையுடன் கூடிய மரணத்தை அவர்களுக்கு வழங்கமாட்டான். எவர்கள் இறைவனது வழிகாட்டல்களை அவமதிக்கின்றார்களோ அல்லாஹுத்தஆலா அவர்களை அழித்து விடுகின்றான். அல்லாஹ் உங்களை மதிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அதற்காக நீங்கள் நல்லவராக ஆக வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலமாக அல்லாஹ்வின் பார்வையில் கண்ணியம் பெற தகுதியுடையவர்களாக நீங்கள் ஆகி விடுவீர்கள். எவர்கள் இறைவனுக்கு அஞ்சுகின்றனரோ, அவனது கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடக்கின்றனரோ, அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் அந்த இறைவன் ஒரு வித்தியாசத்தை வைத்து விடுகின்றான். மனிதன் அருள்களைப் பெறுவதற்கான இரகசியம் இதில்தான் இருக்கின்றது. அவன் தீமைகளிலிருந்து விலகி இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நபர் எங்கிருந்தாலும் அவர் கண்ணியம் பெறும் தகுதியுடையவராக இருக்கின்றார். ஏனென்றால், அவர் மூலமாக நன்மை கிடைக்கின்றது. அவர் ஏழைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்கின்றார். அண்டை வீட்டார் மீது கருணையுடன் நடந்து கொள்கின்றார். அவர் தீங்கிழைக்கமாட்டார். அவர் பொய் வழக்குகளைத் தொடரமாட்டார். மாறாக அவர் தனது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்றார். இறைவன் பக்கம் ஈடுபாட்டுடன் திரும்புகின்றார். அவரே அல்லாஹ்வின் நேசர் என்று அழைக்கப்படுகின்றார்.

அல்லாஹுத்தஆலா இறையச்சத்தின் வழிகளில் நாம் சென்றவாறு உண்மையில் நிலைத்திருப்பவர்களாக நம்மை ஆக்குவானாக! நாம் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளுக்கு முழுமையான முறையில் கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருப்போமாக! அல்லாஹ் நமது பாவங்களைத் திரையிட்டு மறைப்பானாக! எப்போதும் நம்மிடமிருந்து அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற செயல்களே வெளிப்பட வேண்டும். அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பவர்களாக நாம் ஆவோமாக! அல்லாஹ் எந்த நோக்கத்திற்காக இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பியிருக்கின்றானோ நாம் உண்மையிலேயே அந்த நோக்கத்தை பெறக்கூடியவர்களாகவும் அவர்களது உதவியாளர்களாகவும் இருப்போமாக! மேலும் அல்லாஹ்வின் அன்பின் பார்வை எப்போதும் நம்மீது இருக்கட்டும்.

இன்றும் ஒரு வேதனை நிறைந்த செய்தியைக் கூறவுள்ளேன். பாகிஸ்தானிலுள்ள லாஹூரில் நமது ஒரு அஹ்மதி சகோதரரை சஹீதாக்கி விட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்களைப் பற்றிய சில விபரங்களை கூறுகின்றேன். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவரது ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். சஹீதான இந்த சகோதரரின் பெயர் மதிப்பிற்குரிய ஜவாத் கரீம் சாஹிபாகும். இவர்கள் மதிப்பிற்குரிய கரீம் அஹ்மது சாஹிப் தெஹ்லவி அவர்களின் மகனாவார்கள். இவர்கள் லாஹூரிலுள்ள கிரீன் டவுனில் வசித்து வந்தார்கள்.

ஜுன் 17ந்தேதி அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் கிரீன் டவுணிலுள்ள மதிப்பிற்குரிய ஜவாத் கரீம் சாஹிப் அவர்களது வீட்டிற்குள் புகுந்து துப்பாக்கியால் சுட்டு அவரை சஹீதாக்கி இருக்கின்றனர். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். கிடைத்துள்ள விபரங்களின்படி இவர்கள் கிரீன் டவுணில் உள்ள தனது வீட்டின் மேல் மாடியில் வசித்து வந்தார்கள். அதற்கு கீழ்த்தளத்திலுள்ள வீட்டில் இவரது மூத்த சகோதரரான இம்தியாஸ் அத்னான் சாஹிப் வசித்து வந்தார்கள். இவர்களது தாயாரும் இவருடன் இருந்து வந்தார்கள். இரவு 7.45 மணிக்கு அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் இவர்களது வீட்டிற்குள் புகுந்தனர். இரண்டு நபர்கள் வெளியில் நின்றனர். இரண்டு நபர்கள் வீட்டிற்குள் சென்றனர். அங்கு சென்றதும் அவர்கள் கரீம் சாஹிபை அழைத்தனர். உள்ளே சென்ற நபர்களை எதிர்த்து இவர்கள் சண்டை போட்டார்கள். அப்போது தாக்குதல் நடத்தி ஒருவர் சுட்ட குண்டு இவரது நெஞ்சினுள் பாய்ந்து வெளியே வந்து விட்டது. சப்தம் கேட்டு கீழ்த்தளத்திலிருந்த அவரது சகோதரர் வெளியே வந்தார். தாக்குதல் நடத்தியவர்கள் திறந்த வெளியில் மீண்டும் துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டு இனி உன்னுடைய முறை வரவிருக்கின்றது என்று கூறியவாறு அங்கிருந்து ஓடி விட்டனர். இவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். ஆனால் செல்லும் வழியிலேயே இவர் சஹீதாகி விட்டார்.

சஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அஹ்மதிய்யத்தின் பிரவேசம் இவரது கொள்ளுப் பாட்டனாரான இந்தியாவிலுள்ள டில்லியைச் சேர்ந்த ஹகீம் முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்களது பைஅத்தின் மூலம் ஏற்பட்டது. இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கைகளில் பைஅத் செய்தார்கள். இவர் தமது குடும்பத்தில் முதல் அஹ்மதியாவார்கள். இவர்களது கொள்ளுத் தாத்தாவான மர்ஹூம் இஃஜாஸ் ஹுஸைன் சாஹிப் அவர்கள் கடிதம் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கைகளில் பைஅத் செய்யும் நற்பேறு அவர்களுக்கு கிடைக்கவில்லை. இவ்வாறு இவர்களது கொள்ளுத் தாத்தா சஹாபியாக இருந்தார்கள். இவர்களது தாத்தாவான பாபு நஸீர் அஹ்மது சாஹிப் அவர்கள் நீண்ட காலமாக டில்லியில் ஜமாஅத்தின் அமீர் ஆக இருந்தார்கள்.

சஹீது மர்ஹூமின் வயது 33 ஆகும். வஸிய்யத்தின் அருளுக்குரிய அமைப்பில் இவர்கள் பங்கு பெற்றிருந்தார்கள். தனது தொழிலை இவர் நடத்தி வந்தார். இவரது மனைவி டாக்டர் ஆவார்கள். இவர்களது கிளினிக் இருந்தது. கிளினிக் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் சஹீது மர்ஹூமிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மிகவும் மென்மையான இயல்பின் எஜமானராக இவர்கள் இருந்தார்கள். சிறியவர், பெரியவர் அனைவரையும் மதித்து நடப்பது இவரது சிறப்பம்சங்களில் ஒன்றாக இருந்தது. தூய உள்ளம் கொண்ட மனிதராக இவர்கள் இருந்தார்கள். எல்லாருக்கும் அவர்களது பணிகளில் ஒத்துழைப்பு நல்கி வந்தார். எல்லாரது துக்கங்களிலும் பங்கு கொள்வார். ஜமாஅத் பணிகளில் ஆர்வத்துடன் பங்கேற்பவர்களாக இருந்தார்கள். இவர்களது வீடு நீண்ட காலமாக தொழுகைக்கான சென்டராகவும் இருந்து வந்தது. தனது சிறு வயதிலிருந்தே தனது ஹல்காவின் ஸயீம் ஆக இவர் இருந்து வந்தார். மாவட்ட அளவிலும் உள்ளூர் அளவிலும் குத்தாமுல் அஹ்மதிய்யா பணிகளைச் செய்து வந்தார்.

இவரது தாயார் இவர் சஹீதான அன்று இவ்வாறு கூறினார்கள்: ஜவாது கரீம், தான் கண்ட கனவை என்னிடம் கூறினார்கள். சிலர் என்னை அடிக்கின்றனர். எனது மூத்த சகோதரர் எனக்கு அருகில் நிற்கின்றார். அவர் என்னைக் காப்பாற்றவில்லை எனக் கூறினார். இவ்வாறு தான் சம்பவம் நடந்தது. துப்பாக்கிச் சூடு நடந்து கொண்டிருந்தது. மூத்த சகோதரர் வெளியில் வந்தார். ஆனால் அவரை காப்பாற்ற முடியவில்லை. ஒரு வகையில் இவ்வாறு அந்த கனவு நிறைவேறி விட்டது.

சந்தா கொடுப்பதிலும் மிகவும் திறந்த உள்ளத்துடன் செயல்படக் கூடியவராக இவர்கள் இருந்தார்கள். மற்றவர்களையும் சந்தா கொடுக்கும்படி கூறி வந்தார்கள். தனது சகோதரரிடம் வஃபாத் ஆவதற்கு ஒரு நாள்

முன்பு, ‘‘நினைவில் கொள்ளுங்கள். நான் வஃபாத் ஆகி விட்டால் எனது கணக்கு சரியாக இருக்கின்றது. எதிலும் நான் பாக்கி வைக்கவில்லை. நான் இன்று எனது கணக்கை கொடுத்து முடித்து விட்டேன்’’ என்று கூறினார்கள்.

ஹல்காவின் சதர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது ஹல்காவில் சந்தா கொடுப்பதில் ஒரு சகோதரர் சற்று சோம்பேறித்தனம் காட்டி வந்தார். சஹீது மர்ஹூம் அவர்கள் தொடர்ந்து இவருடன் தொடர்பு வைத்து சந்தா கொடுப்பதில் அவரை சுறுசுறுப்புடன் செயல்பட வைத்ததுடன் மட்டுமல்லாமல் அவரை வஸிய்யத்தும் செய்ய வைத்தார்கள்.

சஹீது மர்ஹூமிற்கு மனைவி மற்றும் மூன்று சிறிய குழந்தைகள் உள்ளனர். மகள் ஹிபத்துல் ஜவாதிற்கு 6 வயதாகிறது. மகன் தல்ஹா ஜவாதிற்கு ஒரு வயதாகிறது. இன்னொரு மகள் ஸஃப்வான் ஜவாது பிறந்து 4 மாதங்கள் ஆகின்றன. இவர்களது தாயார் இவர் சஹீதான சமயத்தில் உயிருடன் இருந்தார்கள். ஆனால் இவர்களது ஜனாஸா நல்லடக்கம் செய்யப்படுவதற்காக ரப்வா கொண்டு செல்லப்பட்ட சமயத்தில் இவரது தாயாருக்கும் மாரடைப்பு ஏற்பட்டது. அவர்களும் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்களது தாயாராக ரஷியா கரீம் தெஹ்லவி சாஹிபா அவர்கள் ஹகீம் முஹம்மது அஹ்மது தெஹ்லவி சாஹிப் அவர்களின் மகளாவார்கள். இவர்களது மகள் சஹீதான பிறகு இவர்களது ஜனாஸா ரப்வா கொண்டு செல்லப்பட்ட சமயத்தில் மாரடைப்பின் காரணமாக இவர்களது தாயார் வஃபாத் ஆகிவிட்டார்கள்.

ரஷியா கரீம் சாஹிபா அவர்களது பெற்றோர்கள் டில்லியில் இருந்து ஹிஜ்ரத் செய்து பாகிஸ்தானுக்கு வந்தார்கள். முதலில் இவர்கள் ஸானிவாலில் இருந்தார்கள். திருமணமாகிய பிறகு இவர்கள் லாஹூர் வந்து விட்டார்கள். ஜமாஅத் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுபவராக இவர்கள் இருந்தார்கள். பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராக இவர்கள் பணியாற்றி வந்தார்கள். பிறகு அப்பணியில் இருந்து ஓய்வு பெற்றார்கள். 1947 ஆம் ஆண்டு இவர்கள் பிறந்தார்கள். தனது ஹல்காவின் இஸ்லாஹ்–வ–இர்சாத் செயலராகவும் இவர்கள் இருந்தார்கள். தனது பிள்ளைகளை ஜமாஅத் பணிகளைச் செய்வதற்காக முன்னே கொண்டு வருவதில் இவர்களது பங்கு இருந்தது.

அல்லாஹ் இவரது தகுதிகளையும் உயர்த்துவானாக! சஹீது மர்ஹூமுடைய பிள்ளைகளையும், அவரது தாயாரான சந்ததிகளையும் அல்லாஹ் பாதுகாப்பானாக! ஜமாஅத்துடன் இவர்களுக்கு வலுவான தொடர்பை ஏற்படுத்துவானாக! நான் எனது இரங்கல் செய்தியை இவர்களுக்கு அனுப்பி வைத்த போது, இவரது சகோதரர் ஜமாஅத்திற்காக எங்களது உயிர் அர்ப்பணமாவதற்கு எல்லா சமயத்திலும் தயாராக இருக்கின்றது; எவ்வித கோழைத்தனமும் எங்களிடமிருந்து வெளிப்படாது இன்சா அல்லாஹுத்தஆலா என்று கூறியுள்ளார். அல்லாஹ் இவர்களை தனது பாதுகாப்பின் கீழ் வைப்பானாக! இவர்களுக்கு தைரியத்தை வழங்குவதுடன், இவர்கள் அனைவரையும் அல்லாஹ் தனது பாதுகாப்புக் கோட்டைக்குள் வைப்பானாக! நான் ஏற்கனவே கூறியது போன்று ஜூமுஆ தொழுகைக்குப் பிறகு இன்சா அல்லாஹ் இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH MOSQUE, London.
on **21.06.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456